ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.11.14 |

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.7 - 2018

**மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2018 நவெம்பர் 13இல் நடைபெற்ற அதனது கூட்டத்தில் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படுகின்ற நியதி ஒதுக்கு விகிதத்தை 1.50 சதவீதப் புள்ளிகளால் 6.00 சதவீதமாகக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இந்தக் குறைப்பின் தாக்கத்தை நடுநிலைப்படுத்தும் நோக்கிலும் அதன் நடுநிலையான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பேணுவதற்காகவும் நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தை 75 அடிப்படைப் புள்ளிகளால் 8.00 சதவீதத்திற்கும் மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை 50 அடிப்படைப் புள்ளிகளால் 9.00 சதவீதத்திற்கும் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.**

**பொருளாதாரமானது அதன் உள்ளார்ந்த நிலையை அடைந்து கொள்வதனை இயலுமைப்படுத்தும் வகையில் நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிப்படுத்துகின்ற பரந்த நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்கள் மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளின் கவனமான பகுப்பாய்வினைத் தொடர்ந்து நாணயச் சபையானது இத்தகைய தீர்மானத்திற்கு வந்துள்ளது.**

**உள்நாட்டுச் சந்தையில் தொடர்ச்சியாக நிலவிய இறுக்கமான நாணய நிலைமைகள் தொடர்ந்தன**

ரூபாய்த் திரவத்தன்மையில் பாரியளவிலும் தொடர்ச்சியாகவும் நிலவிய பற்றாக்குறையானது ஓரிரவு தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக குறுங்கால மற்றும் நீண்ட கால அடிப்படைகளிலும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மத்திய வங்கி நடாத்துவதனைத் தேவைப்படுத்தியுள்ளது. நிலவுகின்ற திரவத்தன்மை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஓரிரவு வட்டி வீதங்களானவை கொள்கை வட்டி வீத வீச்சின் உச்ச எல்லையளவில் தொடர்ந்துமிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. அண்மைய வாரங்களில் அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றை உணரமுடிந்த அதேவேளையில் அநேகமான

ஏனைய சந்தை வட்டி வீதங்கள் பெயரளவு மற்றும் உண்மை நியதிகள் இரண்டிலும் உயர்ந்தளவிலேயே காணப்படுகின்றன.

விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2018 செத்தெம்பரில் தொடர்ந்தும் மெதுவடைந்தது. இருப்பினும், இறக்குமதிகள் மீதான மிகையான செலவிடலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளின் எதிர்பார்ப்புடன் வியாபாரங்கள் தமது கடன் பெறுகைகளினை முன்னிட்டதனால் வங்கிகளிடமிருந்து தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனில் சாத்தியமான தற்காலிக உயர்வடைதலொன்று காணப்பட்டது. 2018இன் மூன்றாம் காலாண்டு வரையான தரவுகளின் அடிப்படையில் தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக் குறித்துக்காட்டியதுடன், பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளுக்குமான கொடுகடன் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்துள்ளது. அரசினாலும் மத்திய வங்கியாலும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியானது எதிர்பார்க்கப்பட்ட பாதையில் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டங்களுக்குப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டின் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கமானது முக்கியமாக தளம்பலடையும் உணவு விலைகளின் வீழ்ச்சியால் உந்தப்பட்டு விரும்பத்தக்க நடு ஒற்றை இலக்க மட்டங்களுக்குக் கீழாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த காலங்களில் பேணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினால் நன்றாக உறுதியடைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கும் வகையில் மையப் பணவீக்கமும் தொடர்ந்தும் மந்தமடைந்துள்ளது. இத்தகைய அபிவிருத்திகளுடன் முதன்மைப் பணவீக்கமானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் குறைந்த நடு ஒற்றை இலக்க மட்டங்களிலேயே தொடர்ந்தும் காணப்படும் என எறிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் பொருத்தமான கொள்கைச் சீராக்கங்களுடன் 2019 காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட வீச்சான 4 – 6 சதவீதத்திற்குள் பேணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அபிவிருத்திகள் இரண்டும் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன**

2018இன் முதல் ஒன்பது மாதங்களில் ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியை விட இறக்குமதிச் செலவின விரிவாக்கம் தொடர்ந்தும் அதிகரித்தமையானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினை விட வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கு வழிவகுத்தது. எனினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் அதேபோன்று முக்கிய நாணயங்களுக்கெதிரான ரூபாவின் தேய்வு என்பவற்றிற்குப் பதிலிறுத்தும் வகையில் தொடர்ந்துவரும் காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தில் மெதுவடைவொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத் துறையுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமடைவானது வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் செயலாற்றத்தின் நியதிகளில் கரிசனையொன்றை ஏற்படுத்தியுள்ளன. நிதியியல் கணக்கில் குறிப்பாக, உலகளாவிய சந்தை வட்டி வீதங்களின் அதிகரிப்பு மற்றும் உயர்வடைந்த அரசியல் உறுதித்தன்மையைப் பிரதிபலித்து அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குச் சந்தை ஆகிய இரண்டும் வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலை அனுபவித்தன.

ஐ.அ.டொலரின் பரந்த அடிப்படையிலான பலப்படுத்தலுக்கு மத்தியில் இறக்குமதிகளிலான குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி அதேபோன்று அண்மைக்கால மூலதன வெளிப்பாய்ச்சல்கள் என்பன செலாவணி வீதத்தின் மீது அழுத்தங்களைத் தோற்றுவித்துள்ளன. அண்மைக் காலங்களின் தேய்வின் போக்கானது மிதமடைந்ததெனினும்

2018இன் நவெம்பர் 13 வரையான காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக 12.9 சதவீதத்தினால் தேய்வடைந்துள்ளது. அதேவேளை, அரசின் ஐ.அ.டொலர் 1 பில்லியனளவான வெளிநாட்டு நாணய கால நிதியியல் வசதிகளின் பெறுகைகளினால் ஆதரவளிக்கப்பட்டு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 ஒத்தோபர் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 7.9 பில்லியனாகக் காணப்பட்டு 4.2 மாத கால இறக்குமதிக் காப்பீட்டினை வழங்குகின்றது.

**பொருளாதார வளர்ச்சியானது 2018இல் விரும்பிய மட்டங்களுக்குக் குறைவாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

கிடைக்கத்தக்கப் பொருளாதார குறிகாட்டிகளுக்கிணங்க உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது மந்தமாக இருப்பதுடன் 2018இல் எதிர்பார்க்கப்படும் மட்டத்தைவிடக் குறைவாகவே இருக்குமெனத் தென்படுகின்றது. பொருளாதாரத்தின் மிகைச் செயலாற்றத்திற்கு வழிவகுக்கின்ற நீடித்துநிலைத்து நிற்காத நாணய மற்றும் இறைத் தூண்டல்களில் தங்கியிருப்பதனை விட நீடித்த அடிப்படையில் வளர்ச்சியை உயர்வடையச் செய்வதற்கு ஒத்திசைவான மற்றும் வெளிப்படையான கட்டமைப்பிற்குள் அமைப்பியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வது வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

**நாணயக் கொள்கைத் தீர்மானமானது சந்தையின் மீது நடுநிலையான தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது**

பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் அதேபோன்று உள்நாட்டு பணச் சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2018 நவெம்பர் 13இல் நடைபெற்ற அதனது கூட்டத்தில் தற்போதைய நடுநிலையான நாணயக் கொள்கை நிலைப்பாடு பொருத்தமானது எனும் கருத்தினைக் கொண்டிருந்தது. எனினும், உள்நாட்டுப் பணச் சந்தையில் பாரியளவிலும் தொடர்ச்சியாகவும் காணப்படுகின்ற திரவத்தன்மைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கொள்கைத் தலையீட்டின் தேவைப்பாட்டை அவதானித்த நாணயச் சபையானது, 2018 திசெம்பர் 16இல் ஆரம்பிக்கின்ற அடுத்த ஒதுக்குப் பேணல் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படுகின்ற நியதி ஒதுக்கு விகிதத்தை அதன் தற்போதைய மட்டமான 7.50 சதவீதத்திலிருந்து 1.50 அடிப்படைப் புள்ளிகளால் 6.00 சதவீதமாகக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. நியதி ஒதுக்கு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு வங்கித்தொழில் முறைமைக்கு கணிசமானளவு ரூபா திரவத்தன்மையை விடுவிக்குமெனவும் அதனால் வங்கிகளின் நிதியிடல் கிரயத்தைக் குறைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரத்தில் நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பினால் ஏற்படும் தாக்கத்தை நடுநிலைப்படுத்துவதற்காகவும் அதன் நடுநிலையான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பேணுவதற்காகவும் நாணயச் சபையானது உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்குத் தீர்மானித்துள்ளது. அதன்படி மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தை 75 அடிப்படைப் புள்ளிகளால் 8.00 சதவீதத்திற்கும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை 50 அடிப்படைப் புள்ளிகளால் 9.00 சதவீதத்திற்கும் உயர்த்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இதனால் கொள்கை வட்டி வீத வீச்சு 100 அடிப்படைப் புள்ளிகளுக்கு ஒடுக்கமடையும். இத்தகைய சீராக்கமானது சந்தையின் வைப்புக்கள் மற்றும் கடன்வழங்கல் வீதங்களுக்கிடையிலான இடைவெளியை ஒடுக்கமடையச் செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**நாணயக் கொள்கைத் தீர்மானம்: நியதி ஒதுக்கு விகிதம் குறைக்கப்பட்டதுடன் கொள்கை வீதங்கள் அதிகரிக்கப்பட்டது**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 9.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடனான பத்திரிகை மாநாடு இன்று (2018 நவெம்பர் 14) பிற்பகல் 01.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2018 திசெம்பர் 28ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | மாச் 18 | யூன் 18 | யூலை 18 | ஓகத் 18 | செத் 18 | ஒத் 18 |
|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.2 | 4.4 | 5.4 | 5.9 | 4.3 | 3.1 |
| | தேநுவிசு(2013=100) | 2.8 | 2.5 | 3.4 | 2.5 | 0.9 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.4 | 3.4 | 3.9 | 3.7 | 3.8 | 3.8 |
| | தேநுவிசு(2013=100) | 1.9 | 1.8 | 2.3 | 2.7 | 3.1 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 18 | யூன் 18 | ஓகத் 18 | செத் 18 | மாச் 18 | யூன் 18 | ஓகத் 18 | செத் 18 |
| ஒதுக்குப் பணம் | 997 | 999 | 1,005 | 1,011 | 11.8 | 12.0 | 10.2 | 11.2 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 6,607 | 6,748 | 6,866 | 6,933 | 16.4 | 14.9 | 13.5 | 13.1 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 106 | 101 | 167 | 8 | 128.6 | 141.1 | 433.1 | (27.0) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 6,500 | 6,646 | 6,700 | 6,926 | 7.5 | 8.6 | 9.8 | 13.1 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,278 | 2,273 | 2,272 | 2,427 | 2.9 | 1.7 | 1.5 | 9.2 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் (அ) | 557 | 619 | 639 | 656 | (2.6) | 8.5 | 22.6 | 27.1 |
| தனியார் துறைக்கான கொடுகடன் (அ) | 5,022 | 5,156 | 5,248 | 5,356 | 15.3 | 14.9 | 14.3 | 15.4 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,112 | 8,292 | 8,403 | 8,502 | 16.7 | 14.8 | 12.7 | 12.5 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மாச்சு 18 முடிவில் | யூன் 18 முடிவில் | ஓகத்18 முடிவில் | செத் 18 முடிவில் | ஒத் 18 முடிவில் | 13 நவெ. 18 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25* |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 | 8.50** |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.41 | 8.50 | 7.92 | 8.40 | 8.44 | 8.49 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 8.17 | 8.32 | 8.03 | 8.56 | 9.48 | 9.65 |
| 182-நாள் | - | 8.85 | 8.60 | - | 9.75 | 9.99 |
| 364-நாள் | 9.69 | 9.39 | 8.99 | 9.51 | 10.39 | 10.89 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.55 | 11.33 | 11.67 | 11.74 | 12.25 | 11.95 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.04 | 14.05 | 14.18 | 14.27 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.25 | 13.94 | 14.35 | 14.22 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.00 | 8.92 | 8.66 | 8.69 | 8.73 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.41 | 11.26 | 10.81 | 10.84 | 10.78 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.33 | 10.57 | 10.24 | 9.72 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

* 2018 நவெம்பர் 14இல் நடைமுறைக்குவரும் வகையில் 8.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது
** 2018 நவெம்பர் 14இல் நடைமுறைக்குவரும் வகையில் 9.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது